[பேரவை தலைவர்] [2016 பிப்ரவரி 20

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12-25

(ஈ) தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முறையாக மீன் வளம் சார்ந்த கல்விக்கென மீன் வளப் பல்கலைக்கழகம் வழங்கிய மீனவ மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே எங்கள் அம்மா! மீன்பிடித் தொழிலின் தரம் உயர்த்திட மீன்பிடித் துறைமுகங்களை நவீனப்படுத்தியதோடு, இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழக மீனவர்களுக்கு ஆழ்கடல் சூரை மீன்பிடிப்புத் திட்டம் தந்த மீனவர்களின் வாழ்வாதாரமே எங்கள் அம்மா! சதிவலைகளை அறுத்தெறிந்து, சதி புனைந்த சோதனைகளையெல்லாம் சாதனை ஆக்குவதில் எங்கள் சாதனைத் தாய்க்கு நிகர் எவருமே இல்லை. நலிந்தோருக்கு நாளெல்லாம் உழைத்து, வறியவருக்கு வசந்தத்தைத் தந்து, வான்மழைபோல் நல்ல திட்டங்களை தினந்தோறும் தந்திடும் தாயே! மண்ணாளப் பிறந்தவராம், மதிநுட்பம் நிறைந்தவராம், எந்நாளும் மக்கள் இதயத்தில் நிறைந்தவராம் எங்கள் அம்மா! பூமிக்கு வந்த புண்ணியமே, புரட்சியில் விளைந்த பொற்காலமே, தமிழகம் காத்திடும் கண்ணியமே, கன்னித் தமிழும் போற்றிடும் எங்கள் காவல் தெய்வமே, மாண்புமிகு அம்மா அவர்களே! உங்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2016 பிப்ரவரி 20] [திரு. கே.ஏ. ஜெயபால்]

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2015-2016, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015-2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு புது நம்பிக்கையூட்டி, இளைய தலைமுறைக்கு புத்தெழுச்சி தந்து, புதுமைகளைச் செயலாக்கி, தமிழகத்தை என்றும் புதியதாய் படைக்கும் வெற்றித் திருமகள்; வாக்களித்த மக்களின் நம்பிக்கையை ஈடேற்றி, நிருவாகத்தைச் சீர்படுத்தி, நேர்படுத்தி, திறம்படவே மேம்படுத்தி, உரிமைக் குரல் எழுப்பி, உற்சாகப் பணியாற்றி, ஆக்கபூர்வமான